★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: தை 27உ வியாழன் (9—2—56) ★ ★ வெளியூர்: தை 28உ வெள்ளி (10—2—56) [இதழ் 204

பெண்ணின் பெருமை!

அகமதாபாத், பிப். 9—

பெண்களை மனிதாபிமானத்துடன் நடத்துவோம் என்று ஆண்களிடம் உறுதிமொழி கோரி இயக்கம் ஒன்றை பெண்கள் நடத்துவர் என்று தெரியவருகிறது.

'ஸ்திரீ கௌரவ தின்' என்ற பெயரில் பெண்ணின் பெருமை நாள் ஒன்று வரும் மார்ச் 10-ந் தேதியன்று குறிப்பிட்டு ஆடவர்களிடம் கையெழுத்து வாங்கப்போகிறார்களாம்.

'பெண்களைத் துன்புறுத்துவதில்லை; மனதை உடைய வைப்பதில்லை' என்று, கையெழுத்துப் போடும் ஆடவர் தன்னைக் கட்

(4-ம் பக்கம் பார்க்க)

அமிர்தசரசில் சோற்றுக் கடைகள்

★★★-★★★★-★★★★★★★★★★★

'ஹர்த்தால்'

(பொது வேலை நிறுத்தம்)

காந்தியார் விளக்கம்

★

"அரசாங்கத்தின் செயலைக் கடுமையாகக் கண்டிக்க 'ஹர்த்தாலே' சரியான முறையாகும். தேசிய அபிப்பிராயத்தைத் தெரிவிக்க, மாபெரும் பொதுக்கூட்டங்களை விடச் சக்திவாய்ந்த மார்க்கம் இது."

—1919-ல் 'யங் இந்தியா'வில்.

★★★★★★★-★★★★★-★★★★★

மலேயாவுக்கு முழு விடுதலை

1957 ஆகஸ்டு 31-ந் தேதி மலேயாவிற்கு முழு விடுதலை அளிக்கப்படும் என்றும், அது பிரிட்டிஷ் காமன்வெல்த்திற்குள் இருக்கும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

'இராஜினாமா' செய்தார்!

பம்பாய் முன்னாள் துணை அமைச்சர் டாக்டர் பி. ஆர். நாவானே, சம்யுக்த மகாராஷ்டிர காங்கிரஸ்காரர்கள் மாநாட்டின் கட்டளைப்படி அனைத்திந்திய காங்கிரஸ் குழு உறுப்பினர் பதவியை 'இராஜினாமா' செய்துவிட்டார்!

10 ஆண்டுகள் தள்ளிப்போட வேண்டுமாம்!

ஷகீத் நகர், பிப். 9—

மாநிலச் சீரமைப்புக் குழு அறிக்கை மீது இறுதி முடிவுகள் செய்வதை இன்னும் பத்தாண்டு காலத்திற்குத் தள்ளிப்போட வேண்டுமென்று அரசியலாருக்குச் சிபாரிசு செய்யும் தனிப்பட்ட உறுப்பினர் தீர்மானம் ஒன்று காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் கொண்டுவரப்படுமாம்.

பந்த் பதறுகிறார்!

"இரயில்வே நிலையங்களை கொளுத்துகிறார்களே, இதைவிடப் பெரிய பைத்தியக்காரத்தனம் வேறென்ன இருக்க முடியும்? ஏற்கனவே இருப்பவைகளை அழித்து விட்டால், என்ன ஆக்கவேலை செய்ய இயலும்?"—என்று, பண்டித பந்த், காங்கிரஸ் நிர்மாண ஊழியர்கள் மாநாட்டில் பேசுகையில் கூறினாராம்!

'வெள்ளை அறிக்கை' வெளிவருமாம்!

துவக்கக் கல்வி சம்பந்தமாக அழகப்பா குழுவின் அறிக்கை பற்றிய சென்னை சர்க்காரின் கருத்துக்கள் அடங்கிய 'வெள்ளை அறிக்கை' ஒன்று, சென்னை சட்டசபை வரவு-செலவுக் கூட்டத்தின்போது வெளியிடப்படுமென்றும், பின்னர் இதுபற்றி விவாதித்து முடிவு செய்யப்படுமென்றும் தெரிகிறது. 1957—58 கல்வி ஆண்டு முதல், அழகப்பா குழுவின் சிபாரிசுகள் அமுல் நடத்தப்படக்கூடுமாம்.

★★★★★-★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

தலைமை நிலையச் செய்தி

பொதுச்செயலாளர் சுற்றுப்பயணம்

துணைப் பொதுச்செயலாளர் உடன் செல்கிறார்

பொது வேலைநிறுத்தம் (ஹர்த்தால்) குறித்து கழகத் தோழர்களைச் சந்தித்து விளக்கம் கூறுவார்

★

27—1—56 அன்று சென்னையில் சர்வ கட்சி கூட்டணியினர் முடிவெடுத்ததற்கேற்ப 20—2—56 திங்கட்கிழமையன்று தமிழ் நாடெங்கும் பொதுவேலை நிறுத்தம் (ஹர்த்தால்) வெற்றிகரமாகவும், அமைதியாகவும் நடைபெற வேண்டி கழகத் தோழர்களையும், கூடுமானவரை சர்வகட்சி கூட்டணியில் சேர்ந்துள்ள மற்ற கட்சித் தோழர்களையும் சந்தித்து விவரம் அறியவும், விளக்கம் கூறவும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்களும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்களும், தோழர் கண்ணதாசனும் காரில் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பயணம் செய்வார்கள்.

சென்னையில் நடைபெறவிருக்கும் சர்வ கட்சிப் பொதுக் கூட்டம், ஹர்த்தால் ஆகிய வேலைகளைச் சிறப்புற நடத்த, 17—2—56ம் நாள் இரவே, இருவரும் சென்னை வந்து சேர வேண்டியிருப்பதால் கீழ்க் குறிப்பிட்டுள்ள பேரூர்களில் மட்டுமே ஏறத் தாழ அந்தந்த நேரத்திற்கு வந்து சில நிமிடங்கள் மட்டுந்தான் தங்க இயலும்.

குறிப்பிட்டுள்ள இடங்களில் கழகத் தோழர்களைக் கண்டு கலந்து உரையாட மட்டுமே பொதுச்செயலாளர் வருவதால், கார் செல்லும் வழியிலேயே வசதியான ஒரு கட்டிடத்தை ஏற்பாடு செய்து வைத்துக்கொண்டு சந்திக்குமாறும், பொதுக் கூட்டம் போன்ற எத்தகைய நிகழ்ச்சிகளையும் எங்கும் ஏற்பாடு செய்யாமலிருக்கும்படியும் கழக நிர்வாகிகள் கேட்டுக்கொள்ளப் படுகிறார்கள்.

சுற்றுப்பயண விவரம்:

			மணி
பிப். 12—ஞாயிறு :	சென்னையிலிருந்து புறப்பாடு	மாலை	4-00
,,	காஞ்சீபுரம்	,,	6-30
,,	செங்கற்பட்டு	இரவு	11-00
,,	மதுராந்தகம்	,,	12-00
,,	திண்டிவனம்	,,	1-00
	தங்கல்		
பிப். 13—திங்கள் :	விழுப்புரம்	காலை	9-00
,,	புதுவை	,,	10-15
,,	கடலூர்	,,	11-15
,,	சேத்தியார் தோப்பு	பகல்	12-30
,,	அணைக்கரை	,,	1-15
,,	மாயவரம்	,,	2-00
,,	குடந்தை	மாலை	4-00
,,	தஞ்சை	,,	6-00
,,	திருச்சி	இரவு	8-00
	தங்கல்		
பிப். 14—செவ்வாய்:	மணப்பாறை	காலை	8-30
,,	திண்டுக்கல்	,,	10-30
,,	மதுரை	பகல்	12-30
,,	திருமங்கலம்	மாலை	3-30
,,	விருதுநகர்	,,	4-00
,,	சாத்தூர்	,,	5-00
,,	கோவில்பட்டி	,,	5-45
,,	எட்டையாபுரம்	,,	6-15
,,	தூத்துக்குடி	இரவு	7-30
,,	நெல்லை	,,	9-30
	தங்கல்		
பிப். 15—புதன் :	சேரன்மாதேவி	காலை	8-30
,,	அம்பாசமுத்திரம்	,,	9-00
,,	விக்ரமசிங்கபுரம்	,,	9-30
,,	தென்காசி	,,	10-45
,,	கடையநல்லூர்	,,	11-20
,,	சங்கரன்கோயில்	பகல்	12-00
,,	ராசபாளையம்	,,	1-00
,,	திருவில்லிப்புத்தூர்	பகல்	2-15
,,	உசிலம்பட்டி	மாலை	4-15
,,	வத்தலக்குண்டு	,,	5-00
,,	ஒட்டன்சத்திரம்	,,	6-15
,,	பழனி	இரவு	7-00
,,	உடுமலை	,,	8-30
	தங்கல்		
பிப். 16—வியாழன் :	பொள்ளாச்சி	காலை	8-30
,,	கோவை	,,	10-30
,,	திருப்பூர்	பகல்	1-00
,,	ஈரோடு	மாலை	3-00
,,	பவானி	,,	4-30
,,	சேலம்	,,	6-00
,,	தர்மபுரி	இரவு	9-00
	தங்கல்		
பிப். 17—வெள்ளி :	திருப்பத்தூர்	காலை	9-00
,,	வாணியம்பாடி	,,	10-15
,,	ஆம்பூர்	,,	11-00
,,	குடியேற்றம்	பகல்	12-15
,,	வேலூர்	,,	1-30
,,	ஆற்காடு	மாலை	4-15
,,	இராணிப்பேட்டை	,,	4-45
,,	காவேரிப்பாக்கம்	,,	5-15
,,	சீபெரும்பூதூர்	,,	6-30
,,	பூந்தமல்லி	இரவு	7-15
,,	சென்னை வருகை	,,	8-00

'அறிவகம்'
சென்னை-13
9—2—56

தி. மு. கழகம்
தலைமை நிலையம்

காங்கிரஸ் மாநாட்டிற்குப் போட்டியாக அகாலி தள மாநாடு

அமிர்தசரஸ், பிப். 6—

அமிர்தசரஸ் ஷகீத் நகர் காங்கிரஸ் மாநாட்டிற்கு வரும் காங்கிரசாரில் சில ஆயிரம் பேரையாவது, அகாலி தள மாநாட்டிற்கு, சாப்பாட்டு நேரத்திலேனும் வரவழைக்க, அகாலி தளத்தவர் ஒரு ஏற்பாடு செய்திருக்கின்றனராம்.

காங்கிரஸ் மாநாட்டில் ஒரு வேளைச் சாப்பாட்டிற்கு ஒரு ரூபாய் வாங்குகிறார்களாம்; ஆனால் அந்தச் சாப்பாட்டினை, அகாலி தள மாநாட்டில் இலவசமாகத் தர 'குருகாலங்கர்' என்று ஒரு இலவச சாப்பாடு விடுதி திறந்திருக்கிறார்களாம்.

இலவசச் சாப்பாட்டைக் கருதியேனும் காங்கிரஸ் மாநாட்டிற்கு வரும் காங்கிரசாரில் சில ஆயிரம் பேரேனும் அகாலிதள மாநாட்டிற்கு வருவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறதாம்.

இங்கு நடைபெறும் 61-வது காங்கிரஸ் 'மகாசபை'க்குப் போட்டியாக, அகாலிதள மாநாடு பிப்ரவரி 11, 12-ந் தேதிகளில் நடைபெறவிருக்கிறது குறித்து ஏற்கனவே செய்திகள் வெளிவந்துள்ளன.

பன்மொழி மாகாண அமைப்புக்கு எதிர்ப்பு

'அரிஜன்' ஆசிரியரின் ஆணித்தரமான கண்டனம்

"பன்மொழி அமைப்புடன் விளங்கும் காரணத்தால் இந்தியாவில் ஏற்பட்டுள்ள சிக்கல்களுக்கு, மண்டல ஏற்பாடுகள் தக்கதோர் பரிகாரமாகாது. தொல்லைகள் தரும் காரணங்களைப் பெருக்கவே இது உதவும்.

"இந்தியா ஒரு பன்மொழி நாடாக இருக்கும்பொழுது, பன்மொழி இணைப்பாகிய மண்டல ஏற்பாடு இந்திய ஐக்கியத்தைப் பாதுகாக்க உதவாது. பன்மொழி நாடாக இந்தியா இருந்தபோதிலும், இந்தியாவின் ஒற்றுமையை எவ்வாறு வளர்த்து வருவது என்பதுதான் இன்றுள்ள பிரச்சினையாகும்."

—இவ்வாறு, காந்தியார் அவர்களால் நடத்தப்பட்டு வந்த 'அரிசன்' ஆங்கில வார இதழின் ஆசிரியர் மகன்பாய் தேசாய் எழுதியுள்ளார்.

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பிப். 20—சர்வகட்சி ஹர்த்தால் :

'இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்களும் பங்கு பெறலாம்'

" இஷ்டப்பட்டால் (திராவிட) கழக மெம்பர்கள் பிப். 20-ந் தேதி சர்வகட்சி ஹர்த்தாலில் கலந்துகொள்ளலாம்."

—இவ்வாறு, 5—2—56 அன்று திருச்சி தேவர் ஹாலில் நடைபெற்ற திராவிடர் கழக மாணவர் மாநாட்டில் பேசுகையில் பெரியார் ஈ. வெ. ரா. குறிப்பிட்டிருக்கிறார். —'தினமணி': 8-2-56

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

நம் நாடு

தி.மு.க.தின இதழ் — ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்

சென்னை 9—2—'56 வியாழன்

வழியும்-வெற்றியும்

உலக வல்லரசுகளின் பிரதமர்களுள் எந்த ஒரு பிரதமரும், இந்தியப் பேரரசின் நேருவைப் போல், போதனை புரிவதையே ஒரு பெரும் பணியாகக் கொண்டிருப்பவராக இருக்கவில்லை. மற்ற சிறிய அரசுகளின் பிரதமர்களும், நேருவைப் போன்று, சதா சர்வகாலமும் உபதேசம் புரிவதையே ஒரு பெருந் தொழிலாகக் கொண்டிருக்கவில்லை. அவ்வகையில் இந்தியப் பிரதமருக்கு இணையாக எந்த ஒரு நாட்டின் பிரதமரையும் குறிப்பிடுவதற்கில்லை.

ஆட்சிப் பொறுப்பில் தாம் அமர்ந்த நாள்தொட்டு, எதற்கெடுத்தாலும் ஒரு சொற்பொழிவு ஆற்றுவதையே தொழிலாகக் கொண்டிருப்பவர் பண்டிதரேயாவார். எதனையும் சொற்பொழிவின்மூலமே நிறைவேற்றிவிடக்கூடும் என்ற திடநம்பிக்கையிலேயே பண்டிதர், அந்த ஒரு முறையையே மேற்கொண்டிருக்கிறார் என்றே எவரும் எண்ணவேண்டியதாக இருக்கிறது.

பண்டிதர், இந்தியப் பிரதமரான காலந்தொட்டு நேற்று வரை அவர் ஆற்றியுள்ள சொற்பொழிவுகள் அனைத்தையும் ஒருங்கு திரட்டி, ஐக்கிய நாடு சபை துவங்கிய நாள் முதல், அங்கு பல்வேறு நாட்டுப் பிரதிநிதிகளாகப் பலரும் பேசிய பேச்சுக்களையும் ஒன்றுகத் தொகுத்து, இரண்டையும் ஒப்பவைத்துப் பார்த்தாலும் கூட, இந்தியப் பிரதமரின் பேச்சுத் திரட்டே மலைபோல் உயர்ந்திருக்கக்கூடும். அவ்வளவு பேசித் தீர்த்திருக்கிறார், இந்தியப் பிரதமர் நேரு!

பண்டித நேரு, இந்தியப் பிரதமராக இருந்து பேசிவரும் பேச்சுக்கும், அவ்வாறு இல்லாது பேசிவந்த பேச்சுக்கும் அடிப்படையிலேயே பெரியதோர் மாற்றம் உண்டு. அமைப்பு, முறை, போக்கு, பொருள் ஆகிய அனைத்திலுமே மாற்றம் மட்டுமல்ல—இரண்டிற்கும் முரண்பாடே உண்டு.

பண்டித நேரு, இந்தியப் பிரதமராக இல்லாது இருந்த நிலையில் பேசிய பேச்சு, உரிமை வாழ்வின் உயர்வை உணர்த்தவும், விடுதலை வாழ்வின் சிறப்பைத் தெரிவிக்கவும் பயன்படுவதாக இருந்தது.

அப்பேச்சு கேட்டு கோழையும் வீரனானான்; தொடை நடுங்கியும் துணிவு பெற்றான்; கொடுமையாளனும் குணவாளனானான்.

ஏகாதிபத்தியக் கொடுமையை மக்கள் உணர்ந்தனர்; அடிமைத்தனத்தின் இழிவினைத் தெரிந்தனர்; விடுபடும் நெஞ்சுரம் பெற்றனர்; விடுதலைப் படையை விரிவுபடுத்தினர். முடிவில், ஏகாதிபத்தியப் பிடியிலிருந்து நாட்டை விடுவிப்பதிலும் வெற்றி பெற்றனர். சாதாரண நேருவின் பேச்சு சாதித்தவை அவை.

ஆனால், பிரதமர் நேருவின் பேச்சு சாதித்தவை என்ன? அதை ஆராய்வதற்குமுன், அவர் பேச்சுப் போக்கில் ஏற்பட்டுள்ள பெரும் மாறுதலையும் நாம் கருத வேண்டும்.

இந்தியப் பிரதமர் நேரு, சாதாரண நேருபோல் அல்லாது, உரிமைக்குப் புதுப் பொருள் புகல்கிறார்; விடுதலைக்கு விபரீதமான விளக்கம் தருகிறார்; மக்கள் கிளர்ச்சிக்கு மாசு கற்பிக்கிறார்; மக்கள் குரலுக்கு மதிப்பில்லை என்கிறார்; மக்கள் சார்பில் பேசும் அதிகாரம்—உரிமை தம் ஒருவருக்கு மட்டுமே உண்டு என எக்காளமிடுகிறார்.

எதிர்ப்பவரை எத்தர்கள் என்கிறார்; ஆதரிக்க மறுப்பவர்களை அறிவிலிகள் என்கிறார்; மாறுபடுகிறவர்களுக்கு மாசு கற்பிக்கிறார்; அதே நேருதான்—அதிகாரம் பெற்ற பிறகு வேறு நாக்குக் கொண்டு பேசுகிறார்—இல்லை—ஏசுகிறார்.

'மக்கள் முடிவே மகேசுவரன் முடிவு' எனக் கூறி பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தைத் திகைப்படையச் செய்த அதே நேருதான், இந்தியப் பிரதமர் பீடத்தில் ஏறிக்கொண்டு, 'என் முடிவே மகேசுவரன் முடிவு—அதற்கு அடிபணிந்து கிடப்பதே மக்கள் கடமை' எனப் புது ஜனநாயகம் பேசுகிறார்.

'மொழியை அடிப்படையாகக் கொண்டு மாகாணங்களைத் திருத்தி அமைக்க வேண்டும்' என்று பல ஆண்டுக்காலமாகப் பறைசாற்றிவந்த பண்டிதர் தான், நாட்டின் பிரதமர் என்ற புதுக்கோலம் பூண்டவுடன், 'அது கூடாது—ஆகாது—காட்டுமிராண்டித்தனம்' எனும் புதிய பாட்டு பாடுகிறார்.

'மொழிவழியில் மாகாணங்களைத் திருத்தி அமைப்போம்—ஒவ்வொரு மொழிக்கும் புது வாழ்வு அளிப்போம்—தாய்மொழி மூலம் பல்லறிவும் பெற மக்கள் அனைவருக்கும் நல்வழி காட்டுவோம்' என முழக்கமிட்ட பண்டிதர்தான், பிரதமர் போர்வையில் புகுந்துகொண்டு 'மொழி அமைப்பு அழிவைத் தரும்—நாட்டின் சீர்கெடுக்கும்—ஒற்றுமையை உருக்குலைக்கும்—பாரதம் பாழாகும்—சிறு துண்டுகளாகச் சிதறிவிடும்' என ஏகாதிபத்திய வாதம் பேசுகிறார்.

மக்களதிபதியாக இருந்து போற்றிப் புகழ்ந்த அனைத்தையும், மண்டலாதிபதியாகி மாற்ற முயற்சிக்கிறார், பண்டித நேரு; மாற மறுக்கின்றனர், மக்கள். முன்னாள் கற்பித்தப் பாடத்தினை மறக்க மறுக்கின்றனர், மக்கள்.

மக்கள் விருப்பத்தை மதித்து நடக்க மண்டலாதிபதி கண்டிப்பாக மறுக்கிறார். முன்னாள் போதனையை மறந்து நடக்கத் துணிவுகொண்ட மண்டலாதிபதிக்கு, புத்தி புகட்ட மக்களும் அணிவகுத்து நிற்கின்றனர்.

மண்டலாதிபதியின்போக்கு ஒரு திக்கை நோக்குகிறது—மக்களின் போக்கோ எதிர் திக்கை நோக்குகிறது. இருவருக்கும் இடையில் பெரும பிளவு—இலகுவில் இணைக்க முடியாத பயங்கர வெடிப்பு ஏற்பட்டு இருக்கிறது.

மண்டலாதிபதி திகைக்கிறார்—நிலைகுலைகிறார்—அறிவு குழம்புகிறது.

இத்தகு நெருக்கடியான நிலையிலிருந்து மீட்சி பெறும மார்க்கம் காணாது மலைக்கிறார், மண்டலாதிபதி.

மீட்சி பெறும் மார்க்கம் இருக்கிறது-நிச்சயமாக இருக்கிறது.

அது புதிய வழியல்ல—தேய்ந்த பாதைதான்—வெற்றிக்கு இட்டுச் செல்லும் செம்மையான பாதைதான்.

அப்பாதை வழி சென்றதால்தான், பண்டிதர் 'ஆசிய ஜோதி' என்ற புகழுரைக் குரியவரானார். 'மனிதருள் மாணிக்கம்' என்ற பாராட்டுக்குப் பாத்திரமானார். அந்த மார்க்கந்தான் அவரை மண்டலாதிபதியாகவும் உயர்த்திற்று.

அதுதான்—அச்செம்மையான ஏற்பாடுதான்—அத்தேய்ந்த பாதைதான் மகத்தான பலம் பொருந்திய மக்கள் தீர்ப்பு ஆகும்.

அத்தீர்ப்புப் பெற, மீண்டும் ஒரு முறை மண்டலாதிபதியான பண்டிதர், மக்களை நெருங்கவேண்டும்—அணுக வேண்டும்.

பிரச்சினை எதுவானாலும், எத்தகு சிக்கலுடையது என்று எண்ணப்பட்டதானாலும், பயங்கரமானது எனக் கருதப்பட்டதானாலும், மக்களிடத்தில் அதற்கு நல்ல முடிவு இருக்கிறது. உலக வரலாறு இதை மெய்ப்பிக்கிறது.

தேவிகுளம், பீர்மேடு பற்றி தீர்ப்பளிக்கும் உரிமை, மாகாணப் புனரமைப்புக் குழுவிற்கோ, இந்தியப் பேரரசிற்கோ அறவழிப்படி அறவே கிடையாது. அவ்வுரிமையும் கடமையும், இயல்பாகப் பெற்றிருப்பவர்கள் அங்குள்ள மக்களேயாவர்.

அவர்களை அணுகினால்-தீர்ப்பளியுங்கள் எனக் கோரினால்—அதற்கான வழிவகை செய்து தந்தால், நிச்சயமாகத் தீர்ப்புக் கிடைக்கும்; அது நல்ல தீர்ப்பாகவும் இருக்கும்.

மண்டலாதிபதியான நேருவின் அறிவுக் குழப்பமும் தெளிவுறும்; மலையாளிகளுக்கும், தமிழர்களுக்கும மூண்டுள்ள மாச்சரியத் தீயும அணைந்தொழியும்.

பம்பாய் நகருக்கும் இது பொருந்தும்-மக்களைப் பற்றிய மற்ற சிக்கலானப் பிரச்சினைகளுக்கும் பரிகாரம் காணும் சுலபமான மார்க்கம் இது ஒன்றுதான்—இது ஒன்றேதான் இருக்கிறது.

இதற்கு வெறும பேச்சு போதாது-காங்கிரஸ் கட்சி பலம பெறுவது மட்டும போதாது.

பண்டாரதிபதி மனம் மாற வேண்டும்-மக்களை அணுக முனையவேண்டும். வழியும உண்டு-வெற்றியும நிச்சயம் உண்டு.

அண்ணா சொற்பொழிவு

(3-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

டேன்'' என்று நேரு கூறுவதானால், காஷ்மீருக்கு அல்ல—கராச்சி வரை அல்லவா சென்றிருக்க வேண்டும்? செய்தாரா? இல்லையே! முன்வைத்த காலை பின்வைத்தது மட்டுமின்றி, டில்லியில் உட்கார்ந்து சமாசம அல்லவா பேசிக்கொண்டிருக்கிறார்?

" ஆந்திரர்கள் தனி மாநிலம் வேண்டுமென்றபோது, 'தருகிறேன்' என்று, நேரு கூறினாரா? 'ஆந்திரருக்கு ஒரு நாடா? அவர்கள் 'பாரத் வர்ஷ'த்தில் இல்லையா? பாரத மக்களே! நீங்கள் ஏன் ஆந்திரர் என்றும், தமிழர் என்றும, கேரளர் என்றும, கன்னடியர் என்றும் பிளவுபட்டுப் பேசுகிறீர்கள்? எல்லோரும் 'பாரத புத்திரர்கள்தானே? மொழிவழியாக ஏன் மாநிலம கேட்கிறீர்கள்?'—என்றார்.

" அப்போது ஆச்சாரியார் முதன் மந்திரியாக இருந்தார்; அவர், 'மொழிவழி மாநிலம வேண்டும் என்பது, காட்டுமிராண்டிக்காலக் கருத்து'—என்றார்; அந்தக் கருத்தை ஆதரித்தப் பண்டித நேருவும், 'மொழிவழி மாநிலம கோருவது காட்டுமிராண்டிக் காலக் கருத்து' என்றும் கூறினார். காஷ்மீரிலிருந்து—கன்னியாகுமரி வரை, கல்கத்தாவிலிருந்து—பம்பாய் வரை எல்லாம் ஒன்று. ஒன்று,' என்றார்: அதுமட்டுமா? 'உலகம் ஒன்று, ஒன்று'—என்று கூறினார்.

" ஆனால் ஆந்திரர்களோ, 'உலகம் ஒன்றுதான்; அதில் 'பாரத வர்ஷம்' ஒரு கண்டம்தான்; அதில் ஆந்திரம் ஒரு நாடுதான்—தனி தேசம்தான்,'—என்று வாதிடக் கிளம்பினர்.

" அதனைத் தொடர்ந்து, சென்னையில், பொட்டி ஸ்ரீராமுலு என்ற ஆந்திரர் உண்ணாவிரதம் தொடக்கினர். அதனை இங்கே உள்ள பத்திரிகைகள் எல்லாம், 'உண்ணாவிரதமாம்; இரவில் மட்டும் உண்ணாவிரதமாம்; பழரசம் மட்டும் சாப்பிடுகிறாராம்'—என்றெல்லாம் கேலி செய்தன!

" பொட்டி ஸ்ரீராமுலு, உயிருக்கு மன்றாடிக் கொண்டிருந்தார்; இன்னும் 24 மணி நேரத்திற்குள் உயிர் பிரிந்துவிடும்', என்று, அவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தெரிவித்தனர்; அப்போது இங்கிருந்த பிரமுகர்கள் எல்லாம சேர்ந்து கையெழுத்திட்டு, நேருவுக்குத் தந்தி கொடுத்தார்கள் 'பார்லிமெண்டி'ல் பரிபாலனம் செய்து கொண்டிருந்த நேரு, தந்தியைப் பிரித்துப்பார்த்துவிட்டு, 'ஒரு ஆந்திரா ஆந்திர மாகாணம் அமைக்கக் கோரி உண்ணாவிரதம் இருக்கிறாராம்; இதை நான் வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்றார்; அனுதாபப்படுகிறேன் என்பது கூட அல்ல—வன்மையாகக் கண்டிக்கிறேன்' என்று கூறினார். அது மட்டுமல்ல; என்னை இப்படியெல்லாம் மிரட்டிப் பணியவைக்கலாம என்று கருதாதீர்கள்' என்றும் கூறினார்.

" ஆனால், அவர் அப்படிக் கூறிய 36 மணி நேரத்திற்கெல்லாம் பொட்டி ஸ்ரீராமுலு இறந்து, சென்னையில் பெரியதொரு மயான ஊர்வலம் நடைபெற்று, அந்த ஊர்வலத்தைக் காணாத ஆந்திர மக்கள் ஓடுகிற இரயிலை உருட்டி, ஸ்டேஷன்களை கொளுத்தி, கண்ணில் பட்ட அதிகாரிகளை வேட்டையாடி பலாத்காரச் செயல்களில் ஈடுபட்டனர். இது நடைபெற்ற 1½ நாட்களுக்குள், 'முன்வைத்த காலை பின் வைக்கமாட்டேன்' என்று பேசிய உத்தமர்—'மிரட்டிப்பணிய வைக்க முடியாது' என்று பேசிய வீரர்—பட்டாளத்தார் பேச்சுப் பேசிய பண்டிதர்—'ஆந்திர மாநிலம தருகிறேன்' என்றார்.

" இதனால் அவரைக 'கோழை' என்று சொல்லுகிறேன் என யாரும் எண்ணவேண்டாம்; அவர் யூகசாலி—தந்திரசாலி என்பதை விளககுவதற்குத்தான் சொல்கிறேன்.

" முன்பெல்லாம் ஊர் எல்லைகளில் 'டோல் கேட்'டுகள் இருக்கும்; ஒரு ஊர் 'டோல் கேட்'டில் பகல் எல்லாம் ஒருவன் இருப்பான்; இரவில் அவன் சாப்பிடப் போகிறபொழுது இரண்டு காலும் நொண்டியான ஒருவனை அங்கு உட்கார்த்தி வைத்துவிட்டுப் போவான்; அந்த நொண்டி, வண்டி வருவதைத் தூரத்தில் கண்டதும், 'ஓ, வண்டிக்காரரே, வண்டியை நிறுத்து; இல்லாவிட்டால் ஓடிவந்து நிறுத்துவேன்,' என்று பயமுறுத்துவான்; இறங்கி வந்து பார்த்தால், இரண்டு காலுமில்லாத நொண்டி!

' அதுபோலத்தான் பண்டித நேரு, 'முன்வைத்த காலை பின்வைக்க மாட்டேன்' என்று முரட்டுத்தனமாகப் பேசுவது போலத் தோன்றினாலும், அவர், 'மக்கள் ஒன்றுபடுகிறார்கள்; வீர உணர்வு பெற்றுவிட்டார்கள்; ஒற்றுமை உணர்வு கொண்டுவிட்டார்கள்'—என்று தெரிந்தால், மக்கள் கோருவதைத் தருவார்; ஏனெனில், அவர் காமராசரைவிட சரித்திரம் படித்தவர்; வரலாறு கற்றவர்; வீழ்ச்சியுற்ற சாம்ராஜ்யங்களின் சரித்தையும், எழுச்சி பெற்ற சர்வாதிகாரிகள் வீழ்ச்சியுற்ற வரலாற்றையும் தெளிவாகத் தெரிந்திருப்பவர்; மக்கள் திரண்டெழுந்து விட்டால் எத்தனை பெரிய சர்வாதிகாரியானாலும் அவர்கள் என்ன கதியானார்கள் என்பதை அறிந்திருப்பவர்."

பிப்ரவரி 21:

30,000 தொழிலாளர்கள் அடையாள வேலைநிறுத்தம்

நாகபுரி, பிப் 6—

மத்தியப் பிரதேசத் துணி ஆலைத் தொழிலாளர்கள் சம்மேளனம் 21-ந் தேதியன்று மத்தியப் பிரதேசம் முழுமையிலும் ஒருநாள் அடையாள வேலை நிறுத்தம் செய்வதற்குத் தீர்மானித்திருக்கிறதென்றும், 30 000 தொழிலாளர் ஒரு துணி ஆலையில், ஒரு இலாகா மூடப்பட்டதை எதிர்த்து, கடந்த ஒருவார காலமாக நாகபுரி ஜவுளித் தொழிலாளர்கள் கிளர்ச்சி செய்து வருகின்றனர்.

இலங்கையில் தமிழ் மொழிப் பிரச்சினை

தமிழ் மக்களின் புதிய முயற்சி

கொழும்பு, பிப் 6—

இலங்கை மொழித் தகராறில் பிரிட்டிஷ் அரசியார் தலையிட வேண்டுமென கேட்டுக்கொள்வதென இலங்கைத் தமிழர்கள் தீர்மானித்துள்ளதாகச் செய்திகள் கூறுகின்றன. பெருவாரியான அளவில் இலங்கைத் தமிழர்கள் கையெழுத்திட்ட 'மகஜர்' ஒன்றும் அரசியாரிடம் அளிக்கப்படுமாம்.

இதற்கிடையில், இலங்கை மொழிப் பிரச்சினையை ஐ. நா சபையில் எழுப்பும்படி இந்திய சர்க்காரிடம் கேட்டதற்குச் சென்னை தமிழ் வர்த்தக சபை உத்தேசித்திருப்பதை இலங்கைப் பார்லிமெண்ட் உறுப்பினர் ஜி பொன்னம்பலம வரவேற்றுள்ளார்.

'சென்னை சென்னைதான் — பம்பாய் அல்ல' என்பதைக் காட்டுவீர்

பொது வேலைநிறுத்தம் குறித்து அண்ணா விளக்கம்

அண்ணா அவர்கள், சென்னை—மண்ணடியில் நடைபெற்ற மாநில மாநாடு நிதி அளிப்புக் கூட்டத்தில் பேருரை ஆற்றுகையில், 'என்னை நம்ப வேண்டாம் என்றுதான் பெரியார் கூறினாரே தவிர, 'தேவிகுளம்—பீர்மேடு மலையாளிகளுக்கே' என்று கூறவில்லை என்பதைக் குறிப்பிட்டும், அதோடு தொடர்புடைய பிரச்சினைகள் குறித்தும் விளக்கம் தந்தார்.

'பிப். 20 எப்படி நடைபெற வேண்டும்' என்பதையும் அண்ணா அவர்கள் விளக்கமாகக் கூறினார். அக்கருத்துரை விளக்கமாக இங்கு தரப்படுகிறது. தொடர்ந்தும் வெளிவரும் :—

"'என்னை நம்பவேண்டாம்' என்று பெரியார் சொன்னதாக திராவிடர் கழகத் தோழர் ஒருவர், சீட்டெழுதிக் கொடுத்திருக்கிறார்.

"பெரியார், பின் எப்படிக் கூறுவார்? 'நம்பவேண்டாம்' என்றுதான் கூறுவார்; 'நம்பலாம்' என்று கூறினால் இருவருக்கும் பேதம் ஏது? ஒன்றுபட்டு விடுவோமே? 'எங்களை நம்பவேண்டாம்' என்றுதான் பெரியார் கூறினாரே தவிர, 'தேவிகுளம், மலையாளிகளுக்கு' என்று கூறவில்லை; 'பீர்மேடு மலையாளிகளுக்கு' என்றும் கூறவில்லை; அது மட்டுமல்ல—எங்களைவிட ஒருபடி முன்னேறி, 'மலையாளி ஆதிக்கத்தை 'ஒழி' என்று பெரியார் கூறியிருக்கிறார்—கூறிவருகிறார்;

"நாங்கள் அப்படிக்கூடக் கூறவில்லை—நாங்கள் எப்போதுமே கொஞ்சம் அடக்க ஒடுக்கமானவர்கள்; அவ்வளவு வீரம் பெறுவதில்லை; 'மலையாளி ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டும்; ஆனால் அதற்கு இவர்களை நம்பாதே!' என்கிறார் பெரியார்! 'அதற்கு எங்களை நம்பாதே; பெரியார் சொல்கிறபடி நட'—என்றுதான் திராவிடர் கழகத் தோழர்களுக்குச் சொல்ல விரும்புகிறேன்.

"'இவன் எங்கே சென்றாலும், எதையும கெடுத்துவிடுவான்' என்றால், வந்துதான் பாருங்களேன், கூட! எப்படி எப்படிக் கெடுத்துவிடுகிறான் என்று பக்கத்திலிருந்துதான் பாருங்களேன்! போய்க் கொண்டிருக்கும் போது, அந்தப் பக்கம் திரும்பினால், 'ஏன், அந்தப்பக்கம திரும்புகிறாய்? நேர்வழி நட'—என்று தடுத்து நிறுத்திக் கூறுங்களேன்! அதையும் செய்யமாட்டீர்; நீங்களாகவும் செய்யமாட்டீர்கள்; நானாகச் செய்தாலும் குறை சொல்லுவீர்; நான்கு பேராகச் சேர்ந்து செய்தாலும், அந்த நான்கு பேரில், நீங்கள் நடுவில் இல்லாத காரணத்தால், 'நம்பாதே, நம்பாதே!' என்றால், எத்தனை நாளைக்கு, இந்த 'நம்பாதே, நம்பாதே!' என்பதையே சொல்லிக் கொண்டிருப்பது, நாட்டிற்கு!

"நீங்கள், 'நம்பாதே நம்பாதே!' என்று சொல்லிக் கொண்டே இருக்கிறீர்கள்; நாடு என்மீது நம்பிக்கை நம்பிக்கை என்று தெரிவித்துக் கொண்டிருக்கிறது; 'உங்களை நம்புகிறோம்; உங்கள் கழகத்தை நம்புகிறோம; கழகத்தின் மாநில மாநாட்டிற்கு இதோ அச்சாரமாக ரூ. 100 என்று தருகிறார்கள்.

"'என்னை நம்பக்கூடாது' என்று நீங்கள் சொல்லுவதை நாடு ஏற்றுக் கொண்டிருக்குமானால், நான் இங்கே பேசும் போது, கேட்பதற்குக் கூப்பிட்டாலும் ஆள் வரவில்லை என்றால், 'சரி' என்னலாம்; கடற்கரையில் கூட்டம் என்றால், 'வெள்ளம்போல் தமிழர் கூட்டம்' என்பார்கள்; இங்கு 'காவிரிபோல் தமிழர் கூட்டம்' காண்கிறோமே!

"ஊசிப்போன பண்டத்தைக் கூவிக் கூவி விற்பதைப் போல, வாடிப்போன பூவைக் கடை வீதியில் வாய்வலிக்கக் கூவி விற்பதைப்போல தமிழ் மக்களால் வெறுத்து ஒதுக்கப்பட்ட வாதத்தை மீண்டும் மீண்டும்—திரும்பத் திரும்ப, பெரும் இடங்களிலே உள்ளவர்கள் கூறிவருவது, ஏனோ தெரியவில்லை?

"அதனாலே, பெரியாருக்கு எங்கள்மீது நம்பிக்கை இருக்கிறதா இல்லையா என்பதல்ல பிரச்சினை; எனக்குப் பெரியாரிடத்தில் நம்பிக்கை இருக்கிறது; என்னிடத்தில், அவருக்கு என்றைக்குமே நம்பிக்கை இருந்ததில்லை. 'தேவிகுளம்—பீர்மேடு, தமிழருக்கு ஆகப்போகிறதா, இல்லையா?' — என்பதுதான் பிரச்சினை.

"ஜனவரி 27-ந் தேதிதான் என் மீது பெரியாருக்கு நம்பிக்கை இல்லை; 'இதுகள் வருகிற இடத்திற்கு நான் வருவதா?' என்று கூறினாராம்—'தினத் தந்தி' ஆசிரியர் என்னிடம் கூறினார்!

"ம. பொ. சி. அவர்கள் என்னைச் சந்தித்தபோது, நான் அவரிடம் கூறினேன்—'நாங்கள் வருவது என்றால், பெரியார் ஒருவேளை, 'மாட்டேன்' என்று கூறலாம்; ஆகவே, பெரியாருடைய துணையை இழக்க வேண்டாம்; நாங்கள் இந்தக் கூட்டில் சேரா விட்டாலும், உங்கள் திட்டத்தை எதிர்க்க மாட்டோம்'—என்று கூறினேன். எனக்கொன்றும், பெரியாரை நீக்கிவிட்டு, இந்தக் காரியத்தைச் செய்ய வேண்டுமென்று விருப்பமில்லை; ம. பொ. சி. அவர்கள், 'சரி; முதலில் உங்களை வேண்டாம் என்கிறார்; பிறகு, கம்யூனிஸ்டு வேண்டாமென்பார்; பின் சோஷலிஸ்டு வேண்டாமென்பார்; பின், நானே வேண்டாம் என்றால் என்ன செய்வது? முதலில் விட்டுக்கொடுத்தால், அது கடைசிவரை செல்லும்; ஆகவே, அது சாத்தியமில்லை' என்று கூறினார்.

"27-ந் தேதிதான் என்னை நம்பவில்லை; 28-ந் தேதியன்று எப்படி நம்பினார்? 27-ந் தேதி காட்டிய வெறுப்பு, ஏன் 28-ந் தேதியன்று காட்டவில்லை?

"28-ந் தேதியன்று இதைவிடச் சின்ன காரியத்திற்கு—இதைவிடப் பெரிய தலைவர்கள் கூடினார்கள்; ஒரு பக்கம் ஆச்சாரியார்; மற்றொரு பக்கம் ம. பொ. சிவஞான கிராமணியார்; இன்னும் பலர்; நான் எதிரில் தானே உட்கார்ந்திருந்தேன்; எழுந்து சொல்வது தானே பெரியார்—'இவன் இருக்கிற இடத்திற்கு நான் வரமாட்டேன்; இவன் எங்கு சென்றாலும் எதையும் கெடுத்துவிடுவான்; விளம்பரத்திற்காகவே காரியம் செய்பவன்; பொது வாழ்வினாலேயே வயிறு வளர்ப்பவன்; இவன் இங்கிருந்து போனால்தான், 'ஆங்கிலமா—இந்தியா, இந்தியாவின் பொது மொழி?'—என்பதை முடிவு செய்ய முடியும்—என்று, அங்கிருந்த பெரியவர்களிடம் கூறுவது தானே! பெருமைக்கூடப் பட்டிருப்பேன்—'என் தலைவர் இத்தனை பெரிய தலைவர்கள் கூடிய இடத்தில் இப்படிப் பேசினாரே'—என்று!

"பேசவில்லையே, ஏன்? 'அண்ணாதுரையா — வருவானா—வந்து தொலையட்டும்! சிவஞானமா—வந்து ஒழியட்டும்!' என்றுதானே கூறிவிட்டிருந்தார்! 28-ந் தேதியன்று, ஏன், பெரியார் என்மீது வெறுப்பு காட்டவில்லை என்பதைக் கேட்டீர்களா? நீங்கள் அல்ல—திராவிடர் கழகத் தோழர்களைக் கேட்கிறேன்—உங்களுக்கு அதன் காரணம் தெரியவேண்டாம்; எனக்கு நன்றாகத் தெரியும், அந்தக் காரணம்!

"எனவே, திராவிடர் கழகத் தோழர்கள் நம்மோடு வருகிறார்களா, இல்லையா என்பதல்ல பிரச்சினை; அது முக்கியமானதல்ல; 'தேவிகுளம்—பீர்மேடு தமிழர்களுக்காக வேண்டும்'—அதுதான் முக்கியமானது."

"தேவிகுளம்—பீர்மேடு தமிழகத்தில் சேரவேண்டுமென தமிழகமெங்கணுமுள்ள மக்கள் கோருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதற்காக. பிப்ரவரி 20-ந் தேதி தமிழகமெங்கணும் பொது வேலை நிறுத்தம் நடைபெற வேண்டுமென கூட்டணியினர் தெரிவித்துள்ளனர்.

"அன்று, நாட்டில் உள்ள எந்த ஒரு கடையும் திறக்கக் கூடாது; இல்லங்களிலேயே எல்லா மக்களும் தங்கி 'துக்க தினம்'போல கொண்டாட வேண்டும்; சினிமாக் கொட்டகைகள் திறந்திருக்கக் கூடாது; ஓட்டல்கள் மூடிக் கிடக்க வேண்டும்; 'மக்கள் வாழுகின்றார்கள் — மகிழ்ச்சியோடு இருக்கிறார்கள்' என்பதைக் காட்டும் அத்தனை சாதனங்களும் செயலற்றுக் கிடக்க வேண்டும்.

"எந்தக் கட்சியும் சொல்லாத நேரத்தில்—எந்தத் தலைவரும் தூண்டாத நேரத்தில், தலைவர்களுக்கும் — கட்சிகளுக்கும் புத்தி புகட்டுவதுபோல, வீரத்தோடு வகுப்பு அறையை விட்டு வெளியே வந்து, 'தேவிகுளம், பீர்மேடு தமிழருக்கே' என்ற மாணவர்களைமீண்டும் அழைக்கிறேன்—பிப்ரவரி 20-ல் மீண்டும் ஒரு நாள் வகுப்புகளுக்குச் செல்லாதிருக்குமாறு!

"இதற்கு முன்பு நடைபெற்ற கடையடைப்பு எல்லாம், 'தமிழரசுக் கழகத் தோழர் சொன்னார்' என்பதற்காக—தர்மலிங்கம் கடை அடைத்திருப்பார்; 'தமிழரசுக் கழகத்தவர் சொல்லி தர்மலிங்கம் கடை அடைத்தார்' என்பதற்காகவே, கந்தசாமி கடையடைத்திருக்கமாட்டார், 'கம்யூனிஸ்டு சொல்லி கந்தசாமி கடையடைத்தார்' என்பதற்காகவே, கண்ணன் கடையடைத்திருக்கமாட்டார்.

"ஆனால், இப்போது எல்லாக் கட்சியினரும் சேர்ந்து சொல்கிறார்கள் — 'கடைகள் அடைக்கப்பட வேண்டும்; தொழில்கள் நடைபெறக் கூடாது'—என்று!

"'நான்தான் கடையடைப்பு நடத்துகிறேன்; நான்தான் பொதுவேலைநிறுத்தம்நடத்துகிறேன்,' என்று எல்லாக் கட்சிக்காரரும் சொந்தம் பாராட்டும் வகையில் எல்லோரும் இதில் பாத்தியதை பெற—உரிமைகொண்டாட அனைவரும் சேர்ந்து பிப்ரவரி 20-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தத்தை வெற்றிகரமானதாக்க வேண்டும்.

"சினிமாக் கொட்டகைகள், ஓட்டல்கள், கடைகள், இதர தொழிற்சாலைகள் எல்லாம் நடைபெறக்கூடாது என்று தயவு செய்து கேட்கிறோம்.

"நீங்கள், 'மூடு, மூடு, மூடு' என்று கூறிச்செல்வது, பட்டாளத்தார் வீதியில் செல்லும்போது எத்தனை ஒழுங்காகச் செல்வார்களோ அத்தனை ஒழுங்காகவும், கண்ணியமாகவும், அமைதிகெடாமலும் சொல்லிச் செல்ல வேண்டும்; அன்று ஏதேனும் தாறுமாறாக நடந்தால் யார், யார்மீது பழி சொல்லுவது!

"21-ந் தேதியன்று எல்லாக் கட்சி[illegible]னரும்கூடி மீண்டும் பேசும்போது, 'நேற்றுநடைபெற்ற தாறுமாறுக்கு உங்கள் கட்சிக்காரர்கள்தான் காரணம்' என்று ஒருவர் சொல்ல, மற்றவர், 'இல்லை, இல்லை; எங்கள் கட்சிக்காரர்கள் அப்படி நடந்துகொள்ளவேமாட்டார்கள்; உங்கள் கட்சிக்காரர்கள்தான் அதற்குக் காரணம்,' என்று கூற—இப்படி, எங்கள் தமானத்தை வாங்காதீர்கள்.

"20-ந் தேதியன்று பொது வேலை நிறுத்தம் வெற்றிகரமாக — ஆனால், வெறி உணர்ச்சி தலைகாட்டாமல், அருமையாக — ஆனால், அமைதிகெடாமல், பண்பு குறையாமல், பலாத்காரம் தலைகாட்டாமல், சென்னை சென்னைதான் — பம்பாய் அல்ல—என்று பம்பாயும் அறியும்படி நடைபெறவேண்டும்.

"'பிப்ரவரி 20-ல் பொ[illegible] நிறுத்தம் நடைபெற்றால், [illegible] குளம் — பீர்மேடு [illegible] விடுமா?'—என்று [illegible]பவர்களுக்குச் சொல்கிறேன்—[illegible]கள் எல்லாம் மூடிக் கிடந்தால்—மூடிக் கிடக்கும் நேருவின் கண்[illegible] அகலத் திறக்கும்; 'என்[illegible] என்று அவர் கேட்பார்; '[illegible]தாலாம்'—என்று கூறுவார்கள்; 'யார் செய்தது?' என்று கேட்பார்; 'இன்னின்ன கட்சிக்காரர்கள்' என்று கூறுவார்கள்; 'என்ன? இவர்கள் எல்லாம் ஒன்றுபட்டு விட்டார்களா? அப்படியானால் ஆபத்துதான்'—என்று கூறுவார்.

"நீங்கள், நேருவை என்னவென்று நினைக்கின்றீர்கள்? அவர் வேடிக்கையாகச் சொல்கிறார்—'நான் முன்வைத்த காலைப் பின் வைக்கமாட்டேன்' என்று! அதை வைத்து, அவரைப் பற்றித் தப்புக்கணக்குப் போடாதீர்கள்.

"அரசியல் வாதிகள் எல்லாம், 'முன்வைத்த காலைப் பின்வைக்கமாட்டேன்' என்று கூறியிருந்தால், இன்று உலக வரலாறே வேறு வகையாக அல்லவா இருந்திருக்கும்?

"அலெக்சாண்டர், 'முன் வைத்த காலைப் பின்வைக்க மாட்டேன்' என்று கூறியிருந்தால்; இன்று இந்தியா கிரேக்க ஆட்சியின் கீழ் அல்லவா இருந்திருக்கும்? அலெக்சாண்டர் மட்டுமல்ல—செங்கிஸ்கான், தைமூர், கஜனி, கோரி எல்லோருமே அப்படித்தான்; பிளேக், காலராகூட முன் வைத்த காலைப் பின்வைக்கத்தான் செய்கிறது. பண்டித நேரு என்ன பிளேக் காலராவைவிட கொடியவர் என்றா கருதுகிறீர்கள்?

"கடந்த எட்டு ஆண்டுகளாகப் பார்க்கிறோமே—அவர், 'முன்வைத்த காலை பின் வைக்கிறாரா, இல்லையா?' என்பதை! இங்காவது சாதாரணக் கால்; அவர் காஷ்மீரில் வைத்தது தங்கக் கால்; ரூ. 200 கோடி வரை செலவிட்டிருக்கிறார்கள்; படைபலத்தைக்கொண்டு தாக்கினார்கள்; இராணுவத்தை ஏவிவிட்டார்கள்; என்ன ஆயிற்று? 'முன்வைத்த காலை பின்வைக்கமாட்-

(2-ம் பக்கம் பா[illegible])

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

பொதுக் குழு முடிவுப்படி
தி. மு. கழக உறுப்பினர் சேர்க்கும் காலம்
29—2—56
வரை நீடிக்கப்படுகிறது

★

கழகம் வலிவும் பொலிவும் பெறக் கழகச் செயலாளர்கள் உறுப்பினர் பதியும் பணியைத் தீவிரமாக்குவார்களாக!

★

தலைமை நிலையத்தில்

பதிவு செய்யப்பட்ட உறுப்பினர்களின் உரிமைச் சீட்டுகள் பிப்ரவரி 15-ஆம் நாளுக்குமேல் கிளைக் கழகங்களுக்கு அனுப்பிவைக்கப்பெறும்

—தி. மு. கழகத் தலைமை நிலையம்

★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★★

மதுராந்தகத்தில் அண்ணா

மதுராந்தகம் தி. மு. கழகக் கட்டிடத் திறப்பு விழா 11—2—56 சனியன்று நடைபெறும்.

அண்ணா மாலை நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பேசுவார்.

காலை 10 மணிக்கு ஏழைகளுக்கு உணவு அளிக்கப்படும்.

இரவு 10 மணிக்கு நடிப்பு-இசைப் புலவர் இராமசாமியும், அவர்தம் குழுவினரும் நடிக்கும் 'வேலைக்காரி' (அண்ணா எழுதியது) நாடகம் நடைபெறும்.

பன்மொழி மாகாண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் குறிப்பிடுவதாவது:—

"நாட்டில் ஏற்பட்ட குழப்பமான நிலையில், திடீரென மேற்கு வங்கம்—பீகார் இணைப்பு யோசனை வெளியிடப்பட்டதால், அதற்கு ஒரு மதிப்பு ஏற்பட்டிருக்கிறது; ஆனால், அதனுடைய சிக்கல் இப்பொழுது தோன்றத் துவங்கி இருக்கிறது.

"பொருளாதார முன்னேற்றந்தான் மூல நோக்கமாகக் கொள்ளப்படுமானால், ஒரே ஒரு ஆட்சி அமைப்பின் கீழ் ஏன் இந்தியாவைக் கொண்டுவரக்கூடாது?

"மாகாணங்களைத் திருத்தி அமைப்பதற்குரிய மூலநோக்கமாகக் கொள்ளப்பட்டதற்குக் காரணம் நிர்வாகத்தை எளிதாக்குவதற்கும், தீவிரப்படுத்துவதற்கும், சாமானிய மக்களின் நன்மைக்காக கல்வி [illegible]திக்கவும், மற்ற நடவடிக்கைகளை நிர்வகிக்கவுமேயாகும். இந்தக் [illegible]த்தை மீண்டும் முன்னணிக்குக் கொண்டுவர வேண்டிய நேரம் இதுவேயாகும். புதிய மாகாணங்களின் எல்லை அமைப்பு புதிய பாகிஸ்தான் அமைப்பு பேரில் இருக்கக் கூடாது என்பதை நினைவில் வைத்துக்கொள்ளவேண்டும்."

ஆயுதமேந்திய சில போர்ச்சுகீசியர், இந்திய எல்லைக்குள் 200 கெஜ தூரம் நுழைந்து துப்பாக்கிப் பிரயோகம் செய்ததாகத் தகவல் கிடைத்துள்ளதாம்.

நேரு சர்க்கார் இழைத்திடும் அநீதி சுவரொட்டி

தமிழகத்துக்கு நேரு சர்க்கார் இழைத்திடும் அநீதியை விளக்கிக் காட்டிடும் மூவண்ணச் சுவரொட்டிகள் "ஆசிய ஜோதி அளித்திடும் நீதி" என்ற தலைப்பில் தி. மு. கழகத் தலைமை நிலையத்தால் அச்சிடப்பெற்று, ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளுக்கு அனுப்பிவைக்கப் பட்டிருக்கின்றன.

சுவரொட்டிகளைப் பாழாக்காமல் அட்டைகளில் ஒட்டிப் பாதுகாப்பான இடங்களில் வைக்கும்படி கிளைக் கழகங்கள் கேட்டுக்கொள்ளப் படுகின்றன.

'அறிவகம்' சென்னை-13 8-2-'56 — தி. மு. கழக தலைமை நிலையம்

பெண்ணின் பெருமை!

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

டுப்படுத்திக்கொள்ள வேண்டுமாம்!

குஜராத், சௌராஷ்டிரா, கட்ச் பிரதேசங்களின் சமூக சேவா சம்மேளனத்தவர் இந்த இயக்கம் நடத்துகிறார்களாம். இதற்குக் காரணம் பெண்கள், தொல்லை காரணமாகத் தற்கொலை செய்துகொள்ளாமல் தடுப்பதற்குத்தான் என்று கூறப்படுகிறது.

தேவிகுளம்-பீர்மேடு: தி மு.க.விளக்கம்

ஆத்தூர்:

சந்தைப்பேட்டை

11—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
பி. எம். ரெங்கசாமி

பேசுவோர்:
கே. ஏ. மதியழகன்
எம். பி. சுப்பிரமணியம் எம் எல். ஏ.
சிற்றுளி-சுப்பிரமணியம்

★

குத்தாலம்:

நகரப் பூங்காவில்

11-2-56 மாலை 6-30 மணிக்கு

தலைவர்:
என். சண்முகம்

பேசுவோர்:
என். கிட்டப்பா
ஆர். இராமானுசம்
சத்தியவாணி-முத்து

★

ஆரணி (வ. ஆ.)

கோசப்பாளையம் தர்மராசாகோயில் எதிரில்

11—2—56 மாலை 6 மணிக்கு

பேசுவோர்:
என். வி. நடராசன்
வி. எஸ். கோவிந்தராசன்

★

தஞ்சை:

திலகர் திடலில்

11—2—56 மாலை 6 மணிக்கு

தலைவர்:
எஸ். பெத்தண்ணன்

பேசுபவர்:
ஈ. வெ. கி. சம்பத்

தமிழ் வளர்ச்சி மன்றத் துவக்க விழாவில் பொதுச்செயலாளர்

பல்லாயிரம் மக்களிடையே பேருரை

சென்னை, பிப். 7—

தொண்டையார்பேட்டை புது மனைக்குப்பம் தமிழ் வளர்ச்சி மன்றத் துவக்க விழா நேற்று மாலை 7 மணி யளவில் நடைபெற்றது.

விழாப் பொதுக்கூட்டத்திற்கு தோழர் செல்வராஜு தலைமை வகித்தார்.

அடுத்து, தோழர் முகவை—ஆர். எஸ். பாண்டியன் சிறிது நேரம் பேசியதும், துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், இன்றைய தினமுள்ள மிக முக்கியமான தேவிகுளம்—பீர்மேடு பிரச்சினை குறித்து அரியதோர் உரை நிகழ்த்தினர்.

அடுத்து பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், நீண்ட நேரம் அரசியல் நிலைகளை விளக்கி, பிப்ரவரி 20-ந் தேதி பொது வேலை நிறுத்தம் நடைபெறவேண்டிய அவசியம், முறை குறித்தும் விளக்கம் தந்து பேருரை நிகழ்த்தினர்.

பொதுச்செயலாளருக்கும், துணைப் பொதுச்செயலாளருக்கும் மன்றத்தார், கைத்தறி ஆடைகள் அணிவித்து மகிழ்ந்தனர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் நன்றி கூறலுடன் விழா இனிது முடிவுற்றது.

டாக்டர் நடேசனர் நினைவுநாள் விழா

பல்லாயிரம் மக்களிடை அண்ணா பேருரை

சென்னை, பிப். 9—

டாக்டர் நடேசனர் நினைவு நாள் விழாவும், தேவிகுளம்—பீர்மேடு பற்றி விளக்கமும் நேற்று மாலை, சேப்பாக்கம் டாக்டர் நடேசனர் நினைவு மன்றச் சார்பில் நடைபெற்றது.

கூட்டத்திற்குத் தோழியர் அலமேலு அப்பாதுரை தலைமை தாங்கி, உணர்ச்சி மிகப் பேசினர்.

அடுத்து தோழர் கா. அப்பாதுரையார் அவர்கள், மன்றத்தை நிறுவிய தோழர் இராமச்சந்திரன் அவர்களுடைய உருவப் படத்தைத் திறந்துவைத்துப் பேசினர்.

அடுத்து தி. மு. கழகத் துணைப் பொதுச்செயலாளர் என். வி. நடராசன் அவர்கள், அரசியல் நிலைகளை விளக்கி சிறப்பானதோர் விளக்கம் தந்தார்.

இறுதியாக அண்ணா அவர்கள், பயன்மிக்கதோர் பேருரையாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின், நன்றி கூறலுடன் கூட்டம் இனிது முடிவுற்றது.

கூட்டத்திற்குப் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களும் வருகை தந்திருந்தார்.

கூட்டத் துவக்கத்தில் பல கழகத் தோழர்கள் இயக்கப் பாடல்கள் பாடினர்கள்.

'தீச்சுடர்' நிதிக்காகச் சிறப்புக் கூட்டம்

சென்னை கோகலே மண்டபத்தில்

12—2—56 ஞாயிறு காலை 10 மணிக்கு

தலைவர்:
காஞ்சி-கல்யாணசுந்தரம்

பேச்சாளர்கள்:
இரா. நெடுஞ்செழியன்
மு. கருணாநிதி
டி. கே. சீனிவாசன்
சி. பி. சிற்றரசு

பொருள்:
நேற்று - இன்று - நாளை — நாம்

★

நன்கொடை: ரூ. 0—8—0; ரூ. 0—4—0

தேவிகுளம், பீர்மேடு பற்றி தி. மு. க. விளக்கம்

10—2—56 வெள்ளி மாலை 6 மணிக்கு

சென்னை-பெத்துநாயக்கன்பேட்டை

காசி விசுவநாதர் கோயில் திடலில்

தலைவர்:
சி. ஆர். பாலசுந்தரம்

பேசுவோர்:
அண்ணா
என். வி. நடராசன்

வட்ட தி. மு. கழகம், துறைமுகத் தொழிலாளர் சார்பில் நிதியளிப்பு நிகழ்ச்சியும் நடைபெறும்.

—8-வது வட்ட தி. மு. கழகம்.

மதுரை மாவட்ட

தி. மு. கழகத் தோழர்கட்கு:

★

"மதுரை மாவட்ட தி. மு. கழகச் செயற் குழுக் கூட்டம் 12-2-56 காலை 10 மணிக்கு, எண் 4, கட்ருபாளையம் நகர கழக அலுவலகத்தில் நடைபெறும். தேவிகுளம்-பீர்மேடு; பிப். 20 போராட்டம் பற்றி முடிவு செய்யப்படும்,"

என்று, மதுரை மாவட்டச் செயலாளர் தோழர் எஸ். முத்து அவர்கள் அறிவிக்கிறார்.

திருச்சி மாவட்ட

தி. மு. கழகத் தோழர்கட்கு:

★

"12-2-56 பிற்பகல் 3 மணிக்கு திருச்சியில், மாநில மாநாட்டு அலுவலகத்தில் (9, கிலேதார் தெரு, திருச்சி) மாவட்டக் கழக அவசர செயற்குழுக் கூட்டம் நடைபெறும்;

பொருள்:—மாநில மாநாடு; உறுப்பினர் சேர்த்தல்; பொதுக் குழு முடிவுகள்"

என்று, திருச்சி மாவட்டச் செயலாளர் அ. பெ. தர்மலிங்கம் அறிவிக்கிறார்.

43-வது வட்ட தி. மு. க. 5-ம் ஆண்டு விழா

★

11—2—56 மாலை 6 மணிக்கு, மீர்சாகிப்பேட்டை, வெங்கிடாசல முதலி தெரு, பிள்ளையார் கோவில் திடலில், தோழர் மூ. அரங்கநாதன் தலைமையில் நடைபெறும். தோழர்கள் டி. கே. சீனிவாசன், கே. டி. எஸ். மணி சொற்பொழிவாற்றுவர்.

மதுரை மாவட்ட

தி. மு. கழக மாநில மாணவர் கிளை தோழர்களுக்கு

★

"12—2—56 காலை 10 மணிக்கு, மதுரை மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநில மாணவர் கிளை அமைத்தல் குறித்து ஆலோசனைக் கூட்டம், வடக்குமாசி வீதி மறுமலர்ச்சிக் கழகத்தில் நடைபெறும். மாணவத் தோழர்கள் அனைவரும் கலந்துகொள்ள வேண்டுகிறேன். கிளைகள் அமையாத இடங்களில் உள்ள தோழர்கள் அந்தந்த ஊர் தி. மு. கழகக் கிளைச் செயலாளர்களிடமிருந்து அறிமுகக் கடிதங்களுடன் கலந்துகொள்ளவும் ஏற்கனவே உள்ள தி. மா. மு. கழகக் கிளைகள் ஒவ்வொன்றும் இரண்டு பிரதிநிதிகளை அனுப்பிவைக்க வேண்டுகிறேன்,"

என்று, தி. மு. க. மாநில மாணவர் கிளை அமைப்புக் குழு உறுப்பினர் தோழர் மா. பாண்டியன் அறிவிக்கிறார்.

நாஞ்சில்-கி. மனோகரன் வி. சண்முகநாதன்

சுற்றுப்பயணம்

பிப். 10: கும்பகோணம்
11: மேட்டுப்பாளையம்
12: கோவை
13: சூலூர்
14: குன்னூர்
15: ஊட்டி
16: புளியம்பட்டி

தமிழ்க் கலைக் களஞ்சியம்

தமிழ்க் கலைக் களஞ்சியத்தின் மூன்றாம் தொகுதி, 11-ந் தேதி மாலை 5-30 மணிக்கு வெளியிடப் பெறும் சென்னை பல்கலைக் கழகக் கட்டிடத்தில் நடைபெறுகின்ற இந்த வெளியீட்டு விழாவை திரு. கே சந்தானம் துவக்கிவைப்பார். இராஜா சர். முத்தையா பாராட்டுரை வழங்குவார். திரு. தி சு. அவினாசிலிங்கம் தலைமை தங்குவார்.

சேலம் - செவ்வாய்ப்பேட்டை திருக்குறள் கழகம்

11, 12—2—56 ஆகிய இரு நாட்களிலும், மீனாட்சியம்மன் கோயிலில் குன்றக்குடிகளார் தலைமையில், மேற்படி திருக்குறள் கழக 9-ம் ஆண்டு நிறைவு விழா நடைபெறும். பலர் சொற்பொழிவாற்றுவர்.

ஆரம்பப் பள்ளியிறுதித் தேர்வு

"மாணவர் மன்றச் சார்பில் ஆரம்பப் பள்ளியிறுதி (ஈ. எஸ். எல். சி.) வகுப்பு மாணவர்களுக்குத் தமிழ்த் தேர்வு 11—2—56 பிற்பகல் 2 மணி முதல் 4 மணிவரை சென்னை மாநிலமெங்குமுள்ள உயர்தர ஆரம்பப் பள்ளிகளில் நடைபெறும்," என்று அறிவிக்கப்படுகிறது.

நாகைநாதர் மறைவு

8—2—56 புதன் மாலை 4 மணிக்குத் தோழியர் சத்தியவாணி-முத்து தந்தையார் திரு. கே. நாகைநாதர் அவர்கள், தனது இல்லத்தில் (எண் 1, சின்னகுழந்தை தெரு, வரதராஜபுரம் — எழும்பூர் ஐஸ் பாக்டரி சமீபம்) இயற்கையெய்தினர். 9-ந் தேதி பகல் 3 மணிக்கு ஆமிங்டன் வாராபதி மயானத்தில் அடக்கம் செய்யப்பட்டது. நமது ஆழ்ந்த அனுதாபத்தை நண்பர் முத்து தம்பதிகளுக்கு அறிவித்துக் கொள்கிறோம். (ஆ.-ர்.)

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24 சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.